# பொன்னுலகு படைக்கவந்த பொற்காலப் புண்ணியனே! இன்னுமொரு நூற்றாண்டு இரும்!



விடியலை எழுதும்
வெளிச்சக் கதிரோனே!
விதைகளைத் தூவி
விருட்சம் வளர்ப்போனே!

எதிரிகளுக் கெல்லாம்
என்றும் புதிரோனே!
இமைகளைப் போல
இனம்மொழி காப்போனே!

**ஒருநொடி ஓய்வின்றி**
**உழைத்துக் களிப்போனே!**
**ஒவ்வொரு மனிதற்கும்**
**உதவிகள் அளிப்போனே!**

சரித்திரப் பொன்னேட்டில்
சாதனை பொறிப்போனே!
சமத்துவ பூமியைச்
சமர்ப்பித்துத் தெறிப்போனே!

இலக்குகளின் குறியீடாய்
என்றென்றும் இருப்போனே!
இணையாகாா் தாக்குதலை
இளநகையால் தகர்ப்போனே!

மானத்தைத் தோளணியும்
மாலையாய்ப் பார்ப்போனே!
மனவலிமை இரும்பாக்கி
மாப்பகை அழிப்போனே!

மாதரார் உள்ளத்தில்
மங்கலமாய்ச் சிரிப்போனே!
ஆதரவுக் கடல்மீதில்
அறிதுயிலில் மிதப்போனே!

**வெற்றியுடன் விளையாடும்**
**வீரத்தைச் சுமப்போனே!**
**சுற்றிவரும் சூழ்ச்சிகளைத்**
**தூள்தூளாய் அடிப்போனே!**

நாட்டணியைக் காத்தருளும்
கூட்டணியைச் சமைப்போனே!
பாட்டணியில் எமைப்போலப்
பலர்வாழ்த்தச் சிறப்போனே!

**அனைவரது நெஞ்சிலும்**
**அடிக்கரும்பாய் இனித்து**
**வினைகள் அனைத்திலும்**
**வெண்ணிலவாய்ச் சிரித்து**

**மொழிகள் யாவிலும்**
**முத்திரைகள் பதித்து**
**விழிகள் திகைப்புற**
**விரிவானம் அளப்போனே!**

வித்தகப் படைகொண்டு
விஞ்ஞானம் வளர்ப்போனே!
புத்தகச் சாலைகளில்
பொருளாகித் தழைப்போனே!

**பகுத்தறிவுச் சோலையில்**
**பண்பாடிப் பறப்போனே!**
**பாரத நாட்டுக்கே**
**பாடங்கள் எடுப்போனே!**

திட்டங்கள் யாவுக்கும்
தீந்தமிழில் பெயர்சூட்டிக்
கட்டவிழும் மலர்போலக்
கருத்தெல்லாம் மணப்போனே!

வட்டமிடும் கழுகைப்போல்
வளையவரும் இந்திமொழிக்
கொட்டத்தை அடக்கிக்
கோளரியாய்ச் சிலிர்ப்போனே!

சித்தாந்த உணர்ச்சிகள்
சித்தத்தில் முறுக்கேறி
மொத்தமாய் வெளிப்படும்
முழக்கத்தில் வெடிப்போனே!

நேற்றைக்கு மழையில்
இன்றைக்கு முளைத்த
காளான்கள் கூட்டத்தைக்
கால்கொண்டு அழிப்போனே!



**டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி.**
மேனாள் ஒன்றிய இணையமைச்சர்

'இளக்காரம் கொண்டு
எழுகின்ற கருவி'களை
இடக்கையால் ஒதுக்கி
இமயத்தை உதிர்ப்போனே!

**ஆன்றதமிழ்க் கலைஞர்**
**அற்புதமாய் வடித்துச்**
**சான்றோன் ஆக்கியதைச்**
**சாதித்து நிரூபிக்கும்..**

**மற்றுமொரு பாண்டியனே!**
**மக்களாட்சி மன்னவனே!**
**கற்றவர்கள் புகழ்ந்தேத்தும்**
**கருணைமிகு கண்ணியனே!**

பொன்னுலகு படைக்கவந்த
பொற்காலப் புண்ணியனே!
இன்னுமொரு நூற்றாண்டு
இவ்வுலகை நீயாண்டு..
'கருங்காலிக்' கூட்டத்தைக்
கவனமுடன் கையாண்டு..

வரலாற்றுச் சுவடுகளில்
வாசமலர்ப் பதியங்கள்
பன்னூறு பதிக்கப்
பாடுகிறேன் பல்லாண்டு!

கண்ணூறும் எங்கள்
கற்பகக் கனிநீயே
கண்ணேறு படுமாறு
களவெற்றி சூடுவதை

அன்றன்றும் பார்க்கிறது
ஆழிசூழ் உலகம்!

ஐந்தாயிரம் பெற்ற
அருமைத் தாய்மார்கள்
விரைவிலே இடுவார்கள்
வெற்றித் திலகம்!

**என்றென்றும் வெற்றி**
**என்பதனைப் பற்றி**
**எவருக்கும் இங்கே**
**இல்லையே ஐயம்!**
**இரண்டே மாதத்தில்**
**இதையறியும் வையம்!**

## சட்டமன்றத் தேர்தல் :

# 8 வது நாளாக தி.மு.க. விருப்ப மனு விநியோகம்!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் ஏராளமான கழகத்தினர் திரண்டனர்!







சென்னை, பிப். 28-

சட்டப் பேரவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடுபவர்களுக்கான விருப்ப மனு விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் 20.2.2026 அன்று தொடங்கியது.

8வது நாளாக நேற்று (27.2.2026) கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் ஆர்வமுடன் விருப்ப மனுக்களைப் பெற்றனர்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் தி.மு.க. தலைமையில் மெகா கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கூட்டணியில் புதிதாக தே.மு.தி.க. இடம் பெற்றுள்ளது. தொடர்ந்து கூட்டணி கட்சிகளுடன் தி.மு.க. தொகுதிப் பங்கீடு குறித்து அதிகாரப்பூர்வ பேச்சுவார்த்தையை தொடங்கி உள்ளது.

இந்த நிலையில் தி.மு.க. சார்பில் போட்டியிட விரும்புகிறவர்களிடம் இருந்து விருப்ப மனுக்கள் விநியோகம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் கடந்த 20ஆம் தேதி அன்று தொடங்கியது.

8வது நாளான நேற்று (27.02.2026) அண்ணா அறிவாலயத்தில் விருப்ப மனுக்களை கழக அமைப்பு துணைச் செயலாளர் ஆஸ்டின், தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா, அண்ணா அறிவாலய மேலாளர் ஆர். பத்மநாபன் ஆகியோர் பெற்றனர். அப்போது கழகத்தினர் ஏராளமானோர் விருப்ப மனுக்களை அளித்தனர்.

தற்போது விருப்ப மனுக்களைப் பொறுத்தவரையில் 234 தொகுதிகளுக்கும் பெறப்படுகிறது.

இதே போன்று, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக வந்து திரண்டு விருப்ப மனுக்களை வாங்கிச் செல்கின்றனர். ஏராளமானோர் பூர்த்தி செய்த விருப்ப மனுக்களையும் தாக்கல் செய்தனர். விருப்ப மனு விநியோகம் வருகிற மார்ச் 2ஆம் தேதி வரை நடைபெறுகிறது.